**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, நாமக்கல்</u>**

**முன்னிலை : திரு.S.தினேஷ்குமார், B.A., B.L**
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 14-ம் நாள் செவ்வாய்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 480/2025</u>**

**(CNR No. TNNM02-002896-2025)**

தமிழக அரசுக்காக,
காவல் ஆய்வாளார்,
நல்லிபாளையம் காவல் நிலையம்,
நாமக்கல் மாவட்டம்.
குற்ற எண்.237/2024 – குற்றமுறையீட்டாளர்

// எதிராக //

விவேக் (வயது 30),
த/பெ. வெங்கடாச்சலம்,
10/6, நாராயண நகர்,
திண்டுக்கல் வட்டம் மற்றும் மாவட்டம். – எதிரி

| நிகழ்வு | முறையீடு | கைதுஅல்லது முன்னிலை | பிணையின் பேரில் விடுதலை | விசாரணை தொடக்கம் | விசாரணை முடிவு | தீர்ப்பு | தாமத்திற் கான விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| 21.12.2024 | 21.12.2024 | 26.12.2024 | 26.12.2024 | 02.07.2026 | 08.07.2026 | விடுதலை | -- |

**<u>மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 ம் தேதியிட்ட R.O.C. No.814/2020/RG/F1 ன் படியும் மற்றும் குற்றவியல் நடைமுறை விதிகள் 2019 ன் கீழ் விதி 106(4)ன் படி வழக்கின் சுருக்கம்</u>**

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்றம் காவலுக்கு அனுப்பப்பட்ட நாள் | -- |
| 2. | இறுதியறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 29.10.2025 |
| 3. | முதன்மை பதிவேட்டு வழக்க மேல் | -- |

| | | |
|---|---|---|
| | விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | |
| 4. | எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 240 பிரிவின் கீழ் வினவிய நாள் | 26.05.2026 |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பல்வகை மனுக்களின் சுருக்கம் | ---- |
| 6. | சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம்: | |

| சாட்சிகள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
|---|---|---|
| அ.சா.1 | 02.07.2026 | 02.07.2026 |
| அ.சா.2 | 02.07.2026 | 02.07.2026 |
| அ.சா.3 | 02.07.2026 | 02.07.2026 |
| அ.சா.4 | 02.07.2026 | 02.07.2026 |
| அ.சா.5 | 04.07.2026 | 04.07.2026 |

| | | |
|---|---|---|
| 7. | எதிரியிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள் | 08.07.2026 |
| 8. | எதிரி தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய / ஆஜர்படுத்தப்பட்டநாள் | ---- |
| 9. | மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவுப்படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் அதன் விவரம் மற்றும் தீர்வு | --- |

இவ்வழக்கானது கடந்த 29.10.2025-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 08.07.2026-ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபொழுது அரசு தரப்பில் அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் **திரு.S.பிரேம்குமார்** அவர்களும் ஆஜராகி எடுத்துரைத்தும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

### 1. குற்ற இறுதியறிக்கையின் படி அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–

**(1.1)** கடந்த 01.12.2024 ம் தேதி மாலை 05.00 மணிக்கு கரூர் – சேலம் பைபாஸ் ரோட்டில் வள்ளிபுரம் மேம்பாலம் அருகே வள்ளிபுரம் குமரன் டவர்ஸ் எதிரில் இறந்துபோன ராஜு என்பவர் அவரது இருசக்கர வாகனம் TVS XL Super TN 28 AC 2502 என்ற வண்டியில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் அதே மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த Honda Car TN 57 BL 0916 என்ற எண்ணுள்ள வண்டியை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து ராஜுவின் மோட்டார் சைக்கிள் பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், மேற்படி விபத்தில் சாலை வாகன விபத்தில் ராஜு என்பவருக்கு தலையில் பலத்த இரத்த காயத்தை ஏற்படுத்தி இறப்பை ஏற்படுத்தியதாகவும் எதிரி சட்டப் பிரிவுகள் 281, 106(1) BNS ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக நல்லிபாளையம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**(1.2)** குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்குப்பின் மேற்படி வழக்கு எண்ணில் எதிரிக்கு எதிராக 29.10.2025 ம் தேதி இவ்வழக்கு இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது. அழைப்பாணையை பெற்றுக்கொண்டு இந்நீதிமன்றத்தில் ஆஜரான எதிரிக்கு குற்ற இறுதி அறிக்கை மற்றும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் சட்டப்பிரிவு 230 BNSS –2023 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**(1.3)** எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கிய பின்பு வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டுகள் வனைய முகாந்திரம் உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்து எதிரியின் மீது சட்டப் பிரிவுகள் 281, 106(1) BNS ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து எதிரிக்கு புரியும் படி

குற்றச்சாட்டுகள் விளக்கி கூறி வினவிய போது எதிரி பொய் வழக்கு என்று குற்றத்தை மறுத்து வழக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று கூறினார்.

**2.** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து சான்றாவணங்களிலிருந்தும் தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்** :

**(3.1)** இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டு நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த தனது கணவரின் பிரேதத்தை பார்த்து விட்டு நல்லிபாளையம் காவல் நிலையம் வந்து தனது கணவரின் இறப்பு குறித்து நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்ததையும், பிரேத விசாரணைக்கு உடனிருந்து சாட்சி கையொப்பம் செய்ததை பற்றி கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டும், அவர் மூலம் புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டும், விபத்தை கேள்விப்பட்டு பிரேத விசாரணை சாட்சிகளாக அ.சா.2 மற்றும் அ.சா.3 விசாரிக்கப்பட்டுள்ளார்கள். சம்பவத்தை கேள்விப்பட்டு நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு வந்து ராஜு என்பவரின் பிரேதத்தை பார்த்ததையும், சம்பவ இடத்தில் போலீசார் தயார் செய்த பார்வை மகஜரில் சாட்சியாக கையொப்பம் செய்ததை பற்றி கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.4 மூலம் பார்வை மகஜரில் இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(3.2)** இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், பிரேத விசாரணை

அறிக்கை அ.சா.ஆ,6 ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7, இரண்டு வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ.8, 9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4. எதிரியை BNSS–2023 பிரிவு 351(1)(பி) பிரிவின் கீழ் வினவுதல்:–**

அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு எதிராக தோன்றும் சங்கதிகள் குறித்து எதிரியிடம் BNSS–2023 பிரிவு 351(1)(பி) ன் கீழ் வினவிய போது அவற்றை எதிரி பொய்சாட்சி என்று கூறியதோடு தனது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார். இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டன.

**5. தீர்வுக்குரிய பிரச்சனை:–**

**(5.1)** இந்த வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீது சட்டப் பிரிவுகள் 281, 106(1) BNS ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

**6. தீர்வு:–**

**6.1** BSA சட்டப் பிரிவு 53 ஆனது "53. Facts admitted need not be proved" என்று கூறுகிறது. சட்டம் பிரிவு 53–BSAயை இவ்வழக்கில் பொருத்தி பார்க்கையில் எதிரி தரப்பில் விபத்து ஏற்பட்டதையோ, விபத்தில் ராஜு என்பவருக்கு மரணம் ஏற்பட்டுள்ளது என்பதையோ மறுக்கவில்லை. மேலும் இவ்வழக்கு விபத்தானது வாகனத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக ஏற்பட்டது என்று எந்த வாதமும் எதிரி தரப்பில் முன்வைக்கப்படவில்லை. ஆனால் விபத்து ஏற்படுத்திய TN 57 BL 0916 என்ற Honda Car வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி வந்து TN 28 AC 2502 என்ற TVS XL Super வாகனத்தில் வந்த அ.சா.1ன் கணவர் ராஜு மீது மோதி விபத்தை ஏற்படுத்தி அதில் ராஜு இறந்துபோவதற்கு

எதிரி காரணமாக இருந்துள்ளார் என்ற குற்றச்சாட்டை மட்டும் எதிரி மறுத்துள்ளார். ஆகவே இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று மோதி விபத்து ஏற்படுத்தினாரா? இல்லையா? என்பது மட்டும் இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும்.

**6.2.** இவ்வழக்கு விபத்தை நேரில் பார்த்தாக எந்தவொரு சாட்சியும் விசாரிக்கப்பட்வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் யாவும் விபத்தை பற்றி கேள்விப்பட்ட சாட்சிகள் ஆவார்கள்.

**6.3.** இவ்வழக்கில் சம்பவத்தை கேள்விப்பட்ட நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 தனது முன் விசாரணை சாட்சியத்தில் கடந்த 21.12.2024ம் தேதி சனிக்கிழமை அவர் கூலிப்பணம் வாங்குவதற்காக நாமக்கல்லுக்கு TVS XL இருசக்கர வாகனத்தில் மாலை சுமார் 04.30 மணியளவில் எங்கள் வீட்டில் இருந்து புறப்பட்டார் என்றும், பிறகு மாலை சுமார் 05.30 மணியளவில் ஒரு நபர் எனக்கு செல்போனில் தொடர்பு கொண்டு வள்ளிபுரம் கரூர் – சேலம் பைபாஸ் மேம்பாலம் அருகே மாலை சுமார் 05.00 மணிளவில் தனது கணவர் மீது அவருக்கு பின்னால் வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் தனது கணவருக்கு தலையில் அடிப்பட்டு, காதில் இரத்தம் வந்தது அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் நாமக்கல் அரசு மருத்தவமனைக்கு கொண்டு சென்றுள்ளதாகவும், அங்கு மருத்துவர் பரிசோதித்து பார்த்து இறந்துவிட்டதாக சொன்னதாகவும் கூறினார் என்றும், தான் உடனே அரசு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சென்று தனது கணவரின் உடலை பார்த்ததாகவும், பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும், இவ்வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்ட மற்றும் பிரேத விசாரணை சாட்சியாக விசாரிக்கப்பட்ட விபத்தில் இறந்துபோன

ராஜுவின் மகனான அ.சா.2 மற்றும் விபத்தில் இறந்துபோன ராஜுவின் மகளான அ.சா.3 மற்றும் இவ்வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்ட மற்றும் விசாரிக்கப்பட்ட அ.சா.4 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் அ.சா.1யை ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளார்கள். மேலும், அ.சா.4 தனது சாட்சியத்தில் சம்பவத்திற்கு அடுத்த நாள் நல்லிபாளையம் போலீசார் விபத்து நடந்த இடத்திற்கு காலை 07.00 மணியளவில் வந்து விசாரித்து படம் வரைந்தார்கள் என்றும், அதில் தானும், பட்டியல் சாட்சி–6 செந்தில் குமார் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**6.4.** அ.சா.1 முதல் அ.சா.4 தங்களது சாட்சியத்தில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தினார் என்று எதுவும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**6.5.** இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 தனது சாட்சியத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், மேல் விசாரணைக்காக வழக்கின் கோப்புகளை காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தது பற்றியும், காவல் ஆய்வாளர் திரு.யுவராஜ் என்பவரின் கையெழுத்தும், கையொப்பமும் நன்கு பரிட்சையம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். பின்னர், சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடம் குறித்து மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தது குறித்தும், பிரேத விசாரணை அறிக்கை பெற்றது குறித்தும், பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றது குறித்தும், மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றது குறித்தும், எதிரியை கைது செய்து நிலைய ஜாமீனில் விடுவித்தது குறித்தும், எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார். ஆனால், இவ்வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சிகள் யாரும்

சேர்க்கப்படாததாலும், விபத்தை கேள்விப்பட்ட சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் 4 தங்களது சாட்சியத்தில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தினார் என்று எதுவும் கூறவில்லை என்பதாலும், அ.சா.5ன் சாட்சியத்தை வைத்து மட்டும் எதிரி விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்று முடிவுக்கு வர இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**7.** ஆகவே மேற்படி பொருண்மைகளை பரிசீலித்து பார்க்கையில் கடந்த 01.12.2024 ம் தேதி மாலை 05.00 மணிக்கு கரூர் – சேலம் பைபாஸ் ரோட்டில் வள்ளிபுரம் மேம்பாலம் அருகே வள்ளிபுரம் குமரன் டவர்ஸ் எதிரில் இறந்துபோன ராஜு என்பவர் அவரது இருசக்கர வாகனம் TVS XL Super TN 28 AC 2502 என்ற வண்டியில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது, அவருக்கு பின்னால் அதே மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த Honda Car TN 57 BL 0916 என்ற எண்ணுள்ள வண்டியை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து ராஜுவின் மோட்டார் சைக்கிள் பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்ற எதிரிக்கு எதிரான சட்டப்பிரிவு 281 ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. ஆகவே எதிரிக்கு எதிரான சட்டப்பிரிவு 281 ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிக்கு எதிரான சட்டப்பிரிவு 106(1) BNSன் கீழான குற்றச்சாட்டும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**8.** இறுதியாக, எதிரிக்கு எதிராக சட்டப் பிரிவுகள் 281, 106(1)BNS–ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகங்களுக்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து எதிரியை சட்டப் பிரிவு 278(1) BNSS–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் வழக்கு சொத்தை பற்றிய உத்தரவு ஏதும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 14 ஆம் நாள் ஆகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESHKUMAR SUBRAMANI

Digitally signed by DINESHKUMAR SUBRAMANI
Date: 2026.07.14 06:14:14 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

**அட்டவணை :**
**அரசுத்தரப்பு சாட்சிகள் :**

| **சாட்சியின் வரிசை** | **சாட்சியின் பெயர்** | **எவ்வகையான சாட்சி** |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி.ராணி | நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.பூபதி | பிரேத விசாரணை சாட்சி |
| அ.சா.3 | திருமதி.புவனேஸ்வரி | பிரேத விசாரணை சாட்சி |
| அ.சா.4 | திரு.பெரியசாமி | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.5 | திரு.ரவிக்குமார் | புலன் விசாரணை அதிகாரி |

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்</u> :**

| **சான்றாவணங்களின் வரிசை** | **நாள்** | **சான்றாவணங்களின் விபரம்** | **குறியீடு செய்யப்பட்ட சாட்சியின் விவரம்** |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 21.12.2024 | புகார் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 22.12.2024 | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.3 | 21.12.2024 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | 22.12.2024 | பார்வை மகஜர் | அ.சா.5 |
| அ.சா.ஆ.5 | --- | மாதிரி வரைபடம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.6 | 22.12.2024 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.7 | 22.12.2024 | பிரேத பரிசோதனை அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.8 | 03.02.2024 | TN 57 BL 0196 LMV Car என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.9 | 03.02.2024 | TN 28 AC 2502 MCWOG TVS Motors என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.5 |

**<u>அரசு தரப்பு சான்றுப்பொருள்:–</u>** இல்லை

DINESHKUMAR SUBRAMANI
Digitally signed by DINESHKUMAR SUBRAMANI
Date: 2026.07.14 06:14:27 +0530

**<u>எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை.

நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

**<u>குறிப்பு :–</u>**

1. தீர்ப்பு பற்றிய தகவல் அரசு தரப்பிற்கு தெரிவிக்கப்பட்டது.

2. இவ்வழக்கில் சாட்சிகள் 3 முறைக்கு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவில்லை.

**<u>நகல்</u>**

1)மாண்பமை தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.